| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **100/2011** |
| **DATE** | : | **18.11.2025** |
| **பெயர்** | : | **அன்பழகன்** |
| **தந்தை பெயர்** | : | **திருவேம்பலம்** |

**வாதி தரப்பு பி.வா. சா.2 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. 1ம் பிரதிவாதியை சொத்து வாங்குவதற்கு ஒரு மாதம் முன்பு பார்த்தேன். அப்போது அவரிடம் சொத்து வாங்குவது பற்றி பேசினோம். அப்போது சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்தேன். தத்து பத்திரத்தை பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு இரண்டு மனைவிகள். 1ம் பிரதிவாதிக்கு ஆண் வாரிசுகள் உள்ளனரா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு உயிலின் படி அவர் உயிருடன் இருக்கும் வரை அனுபவிக்கும் உரிமை மட்டும் தான் கொடுக்கப்பட்டது என்றால் அவருக்கு ஆண் வாரிசுகள் உண்டாகும் வரை அவர் அனுபவிக்கலாம் என்று உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு அனுபவிக்கும் உரிமை தான் கொடுக்கப்பட்டிருந்தது, எந்தவிதமான உரிமை மாற்று ஆவணமும் எழுத அவருக்கு உரிமை உயிலில் கொடுக்கப்டவில்லை என்று சொன்னால் சரிதான். பின்னர் சாட்சி தானாகவே முன்வந்து அவரது மகன் அவருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக தெரிவித்தார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார்.

7. 2ம் பிரதிவாதியை நான் நேரடியாக பார்த்ததில்லை, அவர் இராணுவத்தில் பணிபுரிவதாக 1ம் பிரதிவாதி கூறியதன் பேரில் கேள்விபட்டுள்ளேன். பி.வா.சா.ஆ.1 சுவீகார பத்திரத்தை பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ–1 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது மேற்படி ஆவணம் 21.02.2003 அன்று எழுதப்பட்டது. மேற்படி ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில் 2ம் பிரதிவாதி பாலமுருகனின் வயது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜரானாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தான் எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்திற்கு மூல காரணம். பி.வா.சா.ஆ –1 பத்திரம் எழுதும் போதும்,

எழுதுவதற்கு முன்பும் அதற்கு பின்பும் 2ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள பாலமுருகன் என்கிற நபர் ஒருவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே வழக்கு சொத்தை நாங்கள் வாங்கியதாக சொல்லும் ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதிக்கு உயில் மூலம் பத்திரம் எழுதி வைக்க எந்த உரிமையும்இல்லை என்று நான் ஏற்கனவே ஒத்துக் கொண்டுள்ளேன் அவ்வாறு இருக்கையில் நான் எவ்வாறு அவரிடம் இருந்து பத்திரம் எழுதி வாங்கினேன் என்று சொன்னால் பாலமுருகன் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் பி.வா.சா.ஆ–3 அடிப்படையில் வாங்கினேன். 1ம் பிரதிவாதி தனக்கு எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக் கொண்டார்.

9. பி.வா.சா.ஆ–1 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. தனக்கு ஆங்கிலம் தெரியாது என்று சாட்சி தெரிவித்தார். மேற்படி ஆவணத்தில் 21.02.2003 சுவீகார பத்திரம் ஏற்கனவே பாலமுருகனை தத்தெடுத்ததை உறுதி செய்வதற்காக எழுதப்பட்டது. மேற்படி பாலமுருகனை ஐயர் வைத்து 1ம் பிரதிவாதி இந்து முறைப்படி தத்தெடுத்தார். அதற்கு என்னென்ன அடிப்படையில் மேற்படி தத்து சம்பிரதாயம் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. உயிலின் படி ஆண் வாரிசிற்கு தான் சொத்து எழுதப்பட்டிருந்தது தத்து எடுக்கப்பட்ட பாலமுருகன் 1ம் பிரதிவாதியின் ஆண் வாரிசு என்று காட்டி உயிலின் மூலம் எந்த சொத்தும் அவருக்கு பாத்தியப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க எந்த உரிமையும் கிடையாது ஆகவே அந்த ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் முகவர் ஆவார் அவருக்கு எழுதி வைக்கப்பட்ட பி.வா.சா.ஆ –4 பவர் ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 04.05.2009 அன்று 3ம் பிரதிவாதி முகவர் என்ற

முறையில் எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் (பிரதிவாதிகள் 6,7ற்கு) எழுதி வைத்த பி.வா.சா.ஆ–5 முதல் 7 கிரைய ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

11. 8ம் பிரதிவாதி ஜெயகிருஷ்ணன் என்பவர் எங்களது வீட்டில் மாடியில் குடியிருந்தார். அவர் எப்போது குடியிருந்தார் என்று ஞாபகமில்லை. அவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறோமா என்றால் அவர் இறந்துவிட்டார். 8ம் பிரதிவாதி இறந்த விவரத்தை இவ்வழக்கில் வாதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தோமா என்று எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

12. 4ம் பிரதிவாதி செல்லமணியை எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் சொத்து அடமானம் வைத்திருந்தார். மேற்படி 4ம் பிரதிவாதியை இவ்வழக்கில் எங்கள் தரப்பு சாட்சியாக நாங்கள் விசாரிக்கபோவதில்லை. அவர் இவ்வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துள்ளரா என்ற விவரம் எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி 45 லட்சத்திற்கு 1ம் பிரதிவாதிக்கு அடமானம் போட்டிருந்தார் அதனை திருப்பி செலுத்தி அந்த அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்துள்ளார்கள். மேற்படி அடமானம் பதிவு செய்யப்பட்டதா என்றாலோ மேற்படி ரசீது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றாலும் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு நிலுவையில் உள்ள போது சொத்தின் ஒரு பகுதியை தனலட்சுமி பைனான்சில் சீட்டு எடுத்தற்கு ஜாமின் கொடுத்துள்ளேன்.

13. 1ம் பிரதிவாதி அடமானம் வைத்து கடன் வாங்கிய காலத்தில் அந்த சொத்தில் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி சொத்தின் உண்மையான உரிமையாளராக இருந்திருந்தால் அவரிடம் இருந்து அனைத்து அசல் ஆவணங்களையும் வாங்கி நான் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள பாலமுருகன் என்ற நபரே கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

14. கடந்த 25 வருடங்களில் நான் எனது பெயரில் எத்தனை சொத்துக்கள் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் இதைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை. எனக்கு யாருக்கும் உரிமை இல்லாத பிரச்சனைக்குரிய சொத்துக்களை வாங்குவது தான் வாடிக்கை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சதி செய்து தவறான முறையில் ஆவணம் எழுதி வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் பெயரிலும் பிரதிவாதி 6,7 பெயரிலும் எழுதப்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயிலின் படி வழக்கு சொத்திற்கு பூரன உரிமையாளர்கள் வாதிகள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு தான் தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

15. 1ம் பிரதிவாதி உயிலின் மூலம் அவருக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளை மீறி சட்டத்திற்கு புறம்பாக எழுதி வைத்த பத்திரங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 சுவீகார பத்திரம் வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது, அவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.